செய்த பிறகு, பாம்பு பிடிப்பவர்கள் பாம்பு கடித்து இறந்தால் தான் அந்தச் சலுகை வழங்கப்படும் என்று அச்சலுகையை அளிக்க மறுத்திருக்கிறார்கள். ஆகவே விவசாயிகளுக்கு விவசாய வேலைகளை அவர்கள் செய்துக் கொண்டிருக்கும்போது பாம்பு கடித்து இறந்தாலும் இந்தச் சலுகை வழங்கப்படும் என்று அரசு அறிவிக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

9.25 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : அது பற்றிய தகவல் என்னிடம் இல்லை; பாம்பை பிடிக்கும்போது அந்த பாம்பு கொத்தினால் பிடித்தவர் செத்தால் உதவி உண்டு. பாம்பு தானாகவே வந்து கடித்தால் அவர்களுக்கும் உதவி உண்டா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். எந்த இடத்தில் பாம்பு தானாக வந்து கடித்தது என்பதை, அந்தத் தகவலை எனக்குத் தருவாரானால் அந்தப் பாம்பைக் கவனிக்க ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இலக்கணத்தில் தன் வினையா, பிற வினையா என்று முடிவு பண்ணினால்தான்.

சாணார்பட்டி ஒன்றியத்தை நத்தம் தாலுக்காவுடன் இணைத்தல்.

*8794 திரு. மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியத்தை திண்டுக்கல் தாலுக்காவிலிருந்து நத்தம் தாலுக்காவுடன் இணைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே,

(அ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) சாணார்பட்டி ஒன்றியப் பகுதியை திண்டுக்கல் தாலுக்காவில் இருந்து பிரித்து நத்தம் தாலுக்காவில் சேர்க்க ஒரு பரிந்துரை வந்துள்ளது. இது பற்றி மேலும் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன, முடிவு 1991 ஆண்டுதான் எடுக்க இயலும்.

[1990 ஆகஸ்டு 22

திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்மிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் முடிவு எடுப்பதாகச் சொன்னதற்கு நன்றி. அதிலே குறிப்பாக நத்தம் தாலூகா. தொழில் துறையிலே பின் தங்கிய தாலுக்கா என அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு யூனியன் மட்டும். அந்த சானார்பட்டி யூனியனை நத்தத்தோடு இணைத்தால் தொழில் துறையிலே பின்தங்கிய பகுதியாக அதை ஏற்று நடத்தித்தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, நத்தம் வட்டத்தில் 3 உள் வட்டங்களே உள்ளதால் நத்தம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மிகையான பணிச் சுமை இல்லை. இந்த நேரத்தில் திண்டுக்கல் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிச்சுமை அதிகமாக உள்ளது. இதனால் திண்டுக்கல் வட்டத்தில் உள்ள சானார்பட்டி சிலுவத்தூர் மற்றும் கம்பலேயம்பட்டி ஆகிய 3 உள் வட்டங்களைக் கொண்ட சானார்பட்டி ஊராட்சி ஒன்றியத்தை திண்டுக்கல் வட்டத்திலிருந்து பிரித்து நத்தம் வட்டத்துடன் சேர்ப்பதற்கு திண்டுக்கல் காய்தே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் முன் மொழிவினை சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையருக்கு அனுப்பியிருக்கிறார். இதனை பரிசீலனை செய்ய கூடுதல் விவரங்களை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரால் கேட்கப்பட்டுள்ளது. முடிவான அறிக்கை அரசுக்கு கிடைக்கப்பெற்றதும் சானார்பட்டி ஒன்றியப் பகுதிகளை திண்டுக்கல் வட்டத்திலிருந்து பிரித்து நத்தம் வட்டத்துடன் இணைப்பதைப் பற்றி அரசு பரிசீலிக்கும். அத்தோடு 1991ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் காரணமாக வருவாய் வட்டங்களின் ஆட்சி வரம்பில் மாற்றம் செய்ய 30—6—1991 வரை தடையாணை அமலில் உள்ளது.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: பேரவைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் சானார்பட்டி யூனியனை இரண்டாகப் பிரித்து நத்தத்தோடு இணைக்க வேண்டும் என்று சொல்கிறார். ஒரே தொகுதி என்ற அடிப்படையிலே அந்த யூனியனில் உள்ள 22 பஞ்சாயத்துகளுமே சேர்த்து நத்தத்தோடு இணைக்க வேண்டும் என்பது தான் எங்களுடைய கருத்து. கனம் அமைச்சர் அவர்கள் 1991 ஆம் ஆண்டிலே அது நிறைவேற்றப்படும் என்று சொல்கிறார். குறிப்பாக பாதி மட்டும் சொல்கிறார்கள். நத்தம் தொகுதி என்று சொன்னால் சானார்பட்டி நத்தம் யூனியன் இரண்டையுமே நத்தம் தாலூகா என்று அறிவித்தால் நலமாக இருக்கும் என்பது எல்லோருடைய கோரிக்கை.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் ஏற்கனவே பதில் சொல்லி விட்டேன். இப்படிப்பட்ட பிரச்சினைகளைப் பரிசீலனை செய்ய கூடுதல் விவரங்களை மாவட்ட ஆட்சித் தலைவரிட மிருந்து சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரால் கேட்கப்பட்டுள்ளது. முடிவான அறிக்கை அர சுக்கு கிடைக்கப் பெற்றதும் சானார்பட்டி ஒன்றியப் பகுதி களை திண்டுக்கல் வட்டத்திலிருந்து பிரித்து நத்தம் வட்டத் துடன் இணைப்பதா அல்லவா என்பது பற்றி அரசால் பரிசீலிக் கப்படும்.

புறநகர் பேருந்துகள் நிலையம் அமைத்தல்

*5610 திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னைப் பெருநகர் குழுமம் பெருநகர் வளர்ச்சிக்காக கத்திப்பாரா சந்திப்பிலிருந்து மீனம்பாக்கம் வரை புறநகர் பேருந்துகள் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் கவனத்தில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

9.30. மணி

திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரத்திலிருந்து சென்னை வரையில் வருகின்ற பேருந்துகளும் மற்றும் எல்லா வண்டிகளும் அந்தச் சாலையில் வருவதாலும் ஏற்படுகின்ற நெருக்கடியை தவிர்ப் பதற்காகவும் இடையிலே தாம்பரத்திலிருந்து சென்னைக்கு வரவேண்டிய பயணிகள் வசதிக்காகவும் பெருகி வருகின்ற சென்னைப் பெருநகர் குழுமம் வளர்ச்சிக்காக கத்திப் பாரா சந்திப்பிலிருந்து மீனம்பாக்கத்திற்கு இடையிலே பல கோடி ரூபாய் மதிப்புள்ள அரசுக்குச் சொந்தமான நிலங்கள் இன்றைக்கு பினாமிகளால் களவாடப்படுவதை தடுப்பதற்காக வாவது இந்தத் திட்டத்தை அங்கே கொண்டுவருவதற்கு உத்தேசிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட் டது போல் பக்கத்திலே ஆலந்தூர் அருகில் ஏற்கனவே ஒரு பேருந்து நிலையம் அமைப்பதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனால் அந்த இடம் பேருந்து நிலையம் அமைப்பதற்கு உகந்ததாக இல்லை என்ற காரணத்தால் அந்த எண்ணம் கைவிடப்பட்டது. அதற்குப் பிறகு பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான சைதாப்பேட்டையில் உள்ள